★ டி. பி. யின் ஆளுமை ஆட்டம் காண்கிறது!

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 சித்திரை 3 இதழ் 65
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 16-4-1994

(கொழும்பு)

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி தனது அதிகார ஆளுமை நிலையை ஸ்திரப்படுத்தும் கொள்கையில் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க இப்போது பல பிரச்சினைகளை எதிர் நோக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தென்மாகாண சபைத் தேர்தலில் ஏற்பட்ட தோல்வி இனப்பிரச்சினை விவகாரத்தில் அவர் நடந்து கொள்ளும் விதம் அமைச்சர் தொண்டமான்- திரு செல்லச்சாமி விடயத்தில் ஏற்பட்ட பாதிப்புகள் போன்றவற்றால் ஜனாதிபதி விஜேதுங்க பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் (4-ம் பக்கம் பார்க்க)

## காரைநகரிலிருந்து பொன்னாலை மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கடற்படை முகாமிலிருந்து நேற்று நண்பகல் 1 மணிக்கு பொன்னாலைப் பகுதியை நோக்கி கடுமையான ஷெல்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை மாதகல் பகுதியிலிருந்து வந்த கடற்படையினரின் பீரங்கிப்படகு ஒன்றும் பொன்னாலைப் பகுதியை நோக்கியே பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டது. -நி

## தென்மராட்சியில் அகோர விமானத் தாக்குதல்

(சாவகச்சேரி)

கொடிகாமம், மந்துவில், அல்லாரைக் கிராமங்களில் நேற்று புக்காரா, பொம்பர் விமானங்கள் ரொக்கட் மற்றும் குண்டு வீச்சுக்களை அரைமணி நேரம் தொடர்ச்சியாக நடத்தின.

நேற்று மதியம் 12-45 மணியளவில் தென்மராட்சியின் வான் பரப்பில் இரு புக்காரா விமானங்களும் ஒரு பொம்மரும் சுற்றி வட்டமிட்டு வந்து மந்துவில், அல்லாரைக் கிராமங்களில் மாறி மாறி ரொக்கட் குண்டுத் தாக்குதல் மேற்கொண்டதில் இருவர் படுகாயமடைந்தனர். மற்றும் ஏனைய வீடுகள் பலவும் சேதமடைந்தன.

மந்துவிலில் நடந்த தாக் (4ம் பக்கம் பார்க்க)

# அரச நாடாளுமன்ற எம்.பிக்கள் நாட்டைவிட்டு வெளியேற தடை

## ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

ஆளும் ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு நடை விதிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி டி' பி. விஜேதுங்கா இந்தத்தடையை விதித்துள்ளார்.

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் இவர்கள் வெளிநாடு செல்வதற்கு தடைவிதிக்கப்பட்டிருக்கிறது.

இது குறித்து ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா ஐ. தே. க. வைச் சேர்ந்த நாடாளுமன்ற எம்.பிக்கள் மத்தியில் நேற்று பேசியபோது கூறியதாவது!

அரச எம்பிக்கள் வெளிநாடு செல்வதற்கு அடுத்த மாதம் முதல் தடைவிதிக்கப்படும். அது தேர்தல் காலத்தில் தமது கடமைகளில் ஈடுபடுவதற்கு வசதியாகவே எம்.பிக்களுக்கு இந்த தடைவிதிக்கப்படுகிறது என்றார்.

நடந்து முடிந்த தென்மாகாணசபைத்தேர்தலில் ஐ.தே.க தோல்வியுற்றதால் அது மீண்டும் ஏற்படாத விதமாகவே இந்தத் தடை உத்தரவை ஜனாதிபதி விதித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இ-நி

## கம்யூனிஸ்ட்கட்சி உறுப்பினர் கைது

(கொழும்பு)

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு உறுப்பினரான எஸ். ஆர். எம்வேல் அவரது [illegible] ஹல [illegible] பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

பின்னர் அவர் மாளிகாவத்தை மஜிஸ்திரேட் முன்னிலையில் (4-ம் பக்கம் பார்க்க)

## சினைப்பர் தாக்குதல் சீவல் தொழிலாளி பலி

(யாழ்ப்பாணம்)

கள் இறக்குவதற்காக பனை மீது ஏறியவர் இராணுவத்தினரின் சினைப்பர் தாக்குதலுக்கு பலியானார். இவரின் சடலம் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது. இவரது தலையில் துப்பாக்கிச்சூட்டுக் காயமும் காணப்பட்டது.

சங்கானை [illegible] முகாமில் வசிக்கும் சந்திரபாக்கியம் (வயது 56) என்பவரே இன்று காலை கள் இறக்குவதற்காக பனையில் ஏறிய போது மாற (4-ம் பக்கம் பார்க்க)

## செல்லச்சாமி செல்வாக்கு சரிந்தது

(கொழும்பு)

அரச வேவு சேவையின் மூலம் தோட்டப்பகுதிகளில் அண்மையில் ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

அமைச்சர் தொண்டமானுக்கா அல்லது திரு. செல்லச்சாமிக்கா தோட்டப்பகுதிகளில் செல்வாக்கு அதிகம் என மேற்படி சேவையின் மூலம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இதன்படி திரு. செல்லச்சாமியின் செல்வாக்கு நூற்றுக்கு ஒருவீதம் வீழ்ச்சியடைந்துள்ளது.

தோட்டப்பகுதிகளில் இதன்படி திரு. தொண்டமானுக்கே அதிகளவு வாக்குகளைப் பெறக்கூடிய செல்வாக்கு உள்ளதென்று இந்த வேவு சேவை அரசுக்கு தெரிவித்துள்ளது.

## தமிழ் இளைஞர் யுவதிகள் தொடர்ந்து கைது

(கொழும்பு)

கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற குண்டு வெடிப் [illegible] புக்குப்பின் தமிழ் இளைஞர் யுவதிகள் தொடர்ந்து கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

கடந்தவாரம் படையினரின் சுற்றிவளைப்புகள் மற்றும் தேடுதல்களின்போது பதினைந்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் கொழும்பு நகரில் கைதுசெய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

தற்போது தினமும் தமிழர் கைது தொடர்ந்து நடைபெற்று வருவதாக கிடைத்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. —நி

## "இலங்கைத்தமிழ் அகதிகளை மரணக்குழிக்குள் தள்ளாதீர்கள்"

### ஜெயலலிதாவிடம் கோரிக்கை

(சென்னை)

தமிழ் நாட்டில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை அவசரப்பட்டு இலங்கைக்கு திருப்பி அனுப்பவேண்டாம், என்று ஈழத்தமிழர் பாதுகாப்பு கழகம் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவிடம் வேண்டு கோள் விடுத்துள்ளது.

இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் தொடர்ந்து போர் நடைபெற்று (4-ம் பக்கம் பார்க்க)

## இளாலி பூநகரி படகுச் சேவை

(யாழ்ப்பாணம்)

இளாலி - பூநகரி படகுச் சேவை இன்று சனிக்கிழமை வழமையான நேரத்துக்கு நடைபெறுமென விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## ஈழத்தமிழருக்கு ஆதரவாக பேரணி

(சென்னை)

இலங்கையிலிருந்து தமிழகத்துக்கு வந்த மாணவர்களுக்கு கல்வி கற்கத் தடை விதித்தமை, தமிழக மீனவர்கள் மீது ஸ்ரீலங்கா கடற்படை நடத்தும் தாக்குதல்கள் போன்ற பல்வேறு காரணங்களை எதிர்த்து இன்று தமிழகத்தில் பெரும் எழுச்சிப் பேரணி ஒன்று நடைபெறவுள்ளது.

தி. மு. க. வின் கோபால (4-ம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீமணி பொதுத்தேர்தலில் போட்டியிட முடிவு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் திருமதி ஸ்ரீமணி அத்துலத்முதலி போட்டியிடப்போவதாக தெரிவிக்கப்படுகிறது.

திருமதி அத்துலத்முதலி தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் கூட்டமொன்று அண்மையில் இடம்பெற்றபோது இதுசம்பந்தமான தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் வேட்பாளராகப் போட்டியிடுவதா அல்லது (4-ம் பக்கம் பார்க்க)

